புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 258 | 24-03-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி


Volum 01 | Issue: 258 | 24-03-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளதாக மக்களவையில் பிரதமர் மோடி தகவல்



புது டெல்லி: மார்ச்.24–

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், இந்தியாவில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளதாகவும், 41 நாடுகளில் இருந்து இந்தியா எரிபொருள் இறக்குமதியில் ஈடுபடுவதாகவும் மக்களவையில் பிரதமர் மோடி கூறினார்.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டு வரும் பதற்றம் குறித்தும், அதனால் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், அதைப் போக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் நேற்று உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர், “கடந்த பத்தாண்டுகளில், நெருக்கடி காலங்களுக்காக கச்சா எண்ணெயைச் சேமித்து வைப்பதற்கு இந்தியா முன்னுரிமை அளித்துள்ளது. இன்று, இந்தியா வசம் 53 லட்சம் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. மேலும், இதை 65 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 11 ஆண்டுகளில் எரிபொருள் இறக்குமதி ஆதாரங்களைப் பன்முகப் படுத்துவதன் மூலம், இந்தியா தனது பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக, நாம் 27 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்து வந்தோம். ஆனால் இன்று 41 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்கிறோம். கடந்த பத்தாண்டுகளில், கச்சா எண்ணெய் சேமிப்பிற்கு நாங்கள் முன்னுரிமை அளித்துள்ளோம். அதனால் நம்மிடம் இப்போது பெரியளவில் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.

மேலும், நமது சுத்திகரிப்புத் திறனும் தற்போது அதிகரித்துள்ளது. சீரான விநியோகத்தைப் பராமரிக்க இந்தியா உலகளாவிய கூட்டாளிகளுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருகிறது. நாங்கள் பல நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். எரிவாயு மற்றும் எண்ணெய் தேவைகளின் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்த எங்களால் முடிந்தவரை முயற்சித்து வருகிறோம்.

இருப்பினும், அப்பகுதியில் நிலவும் சூழ்நிலையால் அபாயங்களும் ஏற்படுகின்றன. கச்சா எண்ணெய், எரிவாயு, உரம் மற்றும் பல எரிபொருள் இறக்குமதியின் பெரும் பகுதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது. இந்த வழித்தடம் தடுக்கப்பட்டிருந்த போதிலும், நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை நாங்கள் உறுதிசெய்து வருகிறோம்.

நாங்கள் 60 சதவிகிதம் எல்பிஜியை இறக்குமதி செய்கிறோம். ஆனாலும், வீட்டுத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம்” என்று அவர் கூறினார்.

# இது உணர்வுபூர்வ கூட்டணி: பாஜக, பாமக, அமமுகவுக்கு தொகுதிகள் ஒதுக்கிய இபிஎஸ் விவரிப்பு



சென்னை: மார்ச்.24–

“தேசிய ஜனநாயகக் கூட்டணிஓர் உணர்வுபூர்வமான கூட்டணி. தமிழகத்தில் அதிமுக ஆட்சியமைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எங்கள் கூட்டணி இதில் தெளிவாக உள்ளது” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 27 தொகுதிகளும், அன்புமணி தலைமையிலான பாமகவுக்கு 18 தொகுதிகளும், அமமுகவுக்கு 11 தொகுதிகளும் நேற்று (மார்ச் 23) ஒதுக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் எடப்பாடி பழனிசாமி கூறும்போது, “அதிமுக நிச்சயமாக 210 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணி. திமுக தலைவர், அதன் கூட்டணி தலைவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு எங்களை விமர்சனம் செய்கின்றனர்.

நாங்கள் டெல்லி சென்றால் திட்டமிட்டு அவதூறு பரப்புவது முதல்வர் ஸ்டாலினுக்கு வாடிக்கை உள்ளது. நான் டெல்லி சென்றாலே முதல்வர் பயப்படுகிறார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி உணர்வுபூர்வமான கூட்டணி. இன்று இரவுக்குள் எங்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மற்ற கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு செய்வது குறித்து அறிவிக்கப்படும்.

தமிழகத்தில் அதிமுக ஆட்சியமைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எங்கள் கூட்டணி இதில் தெளிவாக உள்ளது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் முறைகேடு தடுக்க சென்னையில் ஜிஎஸ்டி துறை சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைப்பு: 24 மணி நேரமும் புகார் அளிக்கலாம்

சென்னை: மார்ச்.24–

தேர்தல் முறைகேடு தடுக்க சென்னையில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரித்துறை துறை சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தேர்தலை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்காக மத்திய சரக்கு மற்றும் சேவை வரித்துறை மற்றும் மத்திய கலால் வரித்துறை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.சென்னை அண்ணா நகரில் உள்ள சென்னை வெளி ஆணையர் அலுவலகத்தில் ஒரு சிறப்பு மத்திய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாட்டு அறை தினமும் 24 மணி நேரமும் இடைவிடாமல் இயங்கும். தேர்தல் தொடர்பான சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணிப்பது, பொது மக்களிடமிருந்து புகார்களை பெறுவது மற்றும் உடனடியாக நடவடிக்கை எடுப்பது என்பது இந்த அறையின் முக்கிய பணியாகும். இந்த கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஷ நியூலி டவர்ஸ், தரைத்தளம், 2054மி, மிமி அவென்யூ, 12வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை ஷ 600 040. தொலைபேசி எண் ஷ 04426142870. மொபைல் மற்றும் வாட்ஸ்அப் எண் — 9498343622.

மின்னஞ்சல் முகவரி ஷ gst. chennaiouter@gov.in அனைத்து ஆணையர் அலுவலகங்களிலும் சிறப்பு நோடல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் நேர்மையை காக்கும் வகையில் மூன்று முக்கியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவதாக, தேர்தல் பறக்கும்படை குழுக்கள் சாலை சோதனைகள், வாகனத் தணிக்கை மற்றும் திருமண மண்டபங்கள் உள்ளிட்ட பொது கூட்டங்கள் நடைபெறும் இடங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றன.

இரண்டாவதாக, கிடங்குகள் மற்றும் கோடவுன்களில் வாக்காளர்களை கவர்வதற்காக பொருட்கள் பதுக்கி வைக்கப்படுவதை தடுக்க நிலையான கண்காணிப்பு குழுக்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றன. மூன்றாவதாக, தமிழ்நாட்டிற்கு வெளி மாநிலங்களிலிருந்து பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்ளூர் சாலைகளில் பறக்கும்படை குழுக்கள் நிறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணித்து வருகின்றன.

எங்காவது சட்டவிரோதமாக பொருட்கள் நகர்த்தப்படுவது அல்லது பதுக்கி வைக்கப்படுவது தெரிந்தால் யாரும் தயங்காமல் மேற்கண்ட தொலைபேசி எண், வாட்ஸ்அப் எண் அல்லது மின்னஞ்சல் மூலம் உடனடியாக புகார் அளிக்கலாம் என தமிழ்நாடு மண்டலத்தின் தலைமை ஆணையர் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

## ‘ஏஐ’யால் வழக்கறிஞராக முடியாது: உச்ச நீதிமன்ற நீதிபதி கருத்து

பெங்களூரு: மார்ச்.24–

உச்ச நீதிமன்ற பார் கவுன்சில் சார்பில் கர்நாடக தலைநகர் பெங்களூருவில் தேசிய மாநாடு நடைபெற்றது.



இதில் உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் பேசியதாவது: “செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில் நுட்பத்தால் நீதித் துறையின் சேவைகள், திறன்களை மேம்படுத்த உதவ முடியும். ஆனால் ஏஐ, வழக்கறிஞராகவோ, நீதிபதியாகவோ செயல்பட முடியாது. ஒரு வழக்கில் 10 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் சூழ்நிலைகளின் அடிப்படையில் 9 பேருக்கு ஜாமீன் வழங்கி, ஒருவருக்கு ஜாமீன் மறுக்க முடியும்.

ஆனால் ஏஐ தொழில் நுட்பம் இவ்வாறு செயல்படாது. இந்த தொழில் நுட்பத்தால் வழக்கறிஞராகவும் செயல்பட முடியாது. இவ்வாறு நீதிபதி விக்ரம் நாத் பேசினார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி என்.கோடீஸ்வர் சிங் பேசும்போது, “நான் வழக்கறிஞராக இருந்தபோது ஆரோக்கியமாக இருந்தேன். ஆனால் நீதிபதியாக பதவியேற்ற பிறகு எனது உடல் நலன் பாதிக்கப்பட்டது.

பணி தொடர்பான மன அழுத்தம் காரணமாக பெரும்பாலான நீதிபதிகள் ரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப் படுகின்றனர்.

எங்களது பணி சூழல் குறித்து சிலருக்கு மட்டுமே நன்றாக தெரியும். கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது” என்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசும்போது, “பல்வேறு மாநிலங்களில் நீதித் துறைக்கான ஒதுக்கீடு ஒரு சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. இதனால் நீதித் துறையின் செயல்பாடு பாதிக்கப்பட்டு உள்ளது. ஒரு நீதிபதியின் பணி காலை 10 மணி முதல் மாலை 5 மணியோடு நிறைவடைந்து விடாது. அவர் 24 மணிநேரமும் பணியாற்றுகிறார். இதை அனைத்து தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்“ என்றார்.

## தமிழகத்தில் ‘துரந்தர் 2’ திரையிடுவதை நிறுத்தக் கோரி ஐகோர்ட்டில் அவசர முறையீடு

சென்னை: ‘துரந்தர் 2’ திரைப்படத்தின் காட்சிகளை தமிழ்நாட்டில் திரையிடுவதை நிறுத்தக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர முறையீடு செய்யப்பட்டது.

பாலிவுட் சினிமாவின் முன்னணி ஹீரோவான ரன்வீர்சிங்நடிப்பில்பிரம்மாண்டமானபொருட்செலவில் உருவான திரைப்படம் ‘துரந்தர் 2’. திரையரங்குகளில் கடந்த 19 ஆம் தேதி வெளியாகி திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிறது.இந்நிலையில்தமிழகதிரையரங்குகளில் இத்திரைப்படத்தின் காட்சிகளை வெளியிட தடை கோரி சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள்முருகன் அமர்வில் வழக்கறிஞர் ஷிலா என்பவர் அவசர முறையீடு செய்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் கடந்த மார்ச் 15 ஆம் தேதி முதல் அமலில் உள்ள நிலையில் இப்படத்தில் அரசியல் தொடர்பாகவும், ஒரு கட்சி சார்பான கருத்துகள் அதிகம் வலியுறுத்தப்படுவதாலும் ‘துரந்தர் 2’ திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் தற்போதைய நிலையில் வெளியிட தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். தேர்தலுக்கு பின் ‘துரந்தர் 2’ திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிட அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்தார். இந்த முறையீட்டை கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, திரைப்படம் வெளியாகி விட்டது, மனுவாக தாக்கல் செய்து விட்டு முறையீடு செய்யும்படி அறிவுறுத்தினர்.

## பெரம்பூரில் பிரச்சாரம் தொடங்குகிறார் விஜய்

சென்னை: பெரம்பூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது. தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தவெக தனித்து போட்டியிடும் சூழலில் 100 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்வு முடிந்து விட்டதாக கூறப்படுகிறது.

அக்கட்சியின் தலைவர் விஜய் வரும் 25 அல்லது 26ம் தேதிகளில் பெரம்பூரில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரச்சாரத்தை தொடங்குவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## பரிசுப் பொருட்களை கொண்டு செல்வதைத் தடுக்க புறநகர் மின்சார ரயில் நிலையங்களில் தீவிர கண்காணிப்பு



சென்னை: மார்ச்.24–

புறநகர் மின்சார ரயில் பகுதிகளில் பரிசுப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை தடுக்கும் வகையில், 24 மணி நேர கண்காணிப்பு தொடங்கப்பட்டுள்ளதாக ரயில்வே போலீஸார் தெரிவித்தனர்.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் தேர்தல் கண்காணிப்பு சிறப்புப் பிரிவை ஏற்படுத்தி, கடந்த 3 வாரங்களில் ரூ.1.60 கோடி தங்கக் கட்டிகள், ரூ.11.66 கோடி வெள்ளி கட்டிகள், ரூ.1.50 கோடி பணம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இதற்கிடையில், புறநகர் மின்சார ரயில்களில் தேர்தலுக்கான பரிசுப் பொருட்கள் கொண்டு செல்ல வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியானது. இதையடுத்து சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களின் புறநகர் மின்சார ரயில் வளாகப் பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் ரயில்களின் வருகை, பயணிகள் நடவடிக்கை ஆகியவற்றைக் கண்காணிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரயில்வே போலீஸார் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ வெளியூர்களிலிருந்து வரும் புறநகர் மின்சார ரயில்கள் மூலமோ தேர்தலுக்கான பரிசுப் பொருட்கள் கொண்டு செல்வதைத் தடுக்கும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளோம்.

அதற்காக 4 பேர்கொண்ட 2 சிறப்பு கண்காணிப்புக்குழுவையும் அமைத்துள்ளோம். அந்தக் குழுவினர் கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் காட்சிகளை ஆய்வுக்கு உட்படுத்தி சந்தேக பயணிகள் குறித்து தகவல் தெரிவிப்பர்.

அந்த தகவலின்படி, சம்பந்தப்பட்ட பயணிகளை சோதனையிட்டு வருகிறோம். கடந்த 2 நாட்களில் தினசரி 220 புறநகர் மின்சார ரயில் சேவைகளை கண்காணித்து வருகிறோம். இதுபோல, எழும்பூர் ரயில் நிலையத்திலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அசாமில் போலீஸ் முகாம் மீதான தாக்குதலில் 4 பேர் காயம்



தின்சுகியா: மார்ச்.24–

அசாம் பேரவை தேர்தல் அடுத்த மாதம் 9ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்காக அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தின்சுகியா மாவட்டத்தின் ஜகுன் பகுதியில் போலீஸ் கமாண்டோ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த இடம் அசாம் அருணாச்சலப் பிரதேசம் எல்லையில் அமைந்துள்ளது. இங்கு நேற்று அதிகாலை 2 மணியளவில் சிலர் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தி, 5 கையெறி குண்டுகளை வீசினர். இதில் 4 போலீஸார் காயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.







ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 98– ஈரோடு கிழக்கு 99– ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் மினிஸ்தி, 100– மொடக்குறிச்சி, 103 பெருந்துறை சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் பார்தி தீக்ஷித், தேர்தல் காவல் பார்வையாளர் ராகேஷ் சந்திர கலாசாகர், ஆகியோர் மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையிலும் வாக்குச்சாவடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்டமாக சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடைபெற்ற நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

# திருச்சி மாவட்டத்தில் 9 சட்டமன்ற தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது

## அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் நடந்தது



திருச்சி, மார்ச்.24

அங்கீகரிக்கப்பட்ட அர சியல் கட்சியினர் முன்னி லையில் சட்ட மன்ற தொகுதிவாரியாக மின் னணு வாக்குப்பதிவு எந் திரங்கள் ஒதுக்கீடு செய் யும் பணி இன்று நடக் கிறது.

சட்டமன்ற தேர்தல்: தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23ந்தேதி நடைபெறஉள்ளது. இதையொட்டி திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதி களுக்கு தேவையான மின்னணு வாக் குப்பதிவு எந்திரங்கள் தேவையான அளவில் இருப்பு உள்ளது. தற்போது வேட்பாளர்களின் பெயர், சின்னம் இடம் பெறும் வாக்குப்பதிவு கருவி 7,906ம், கட்டுப்பாட்டு கருவி 3,541ம், ஒப்புகை சீட்டு வழங்கும் வி.வி.பேட் கருவி 3,810ம் இருப்பு வைக்கப்பட்டு உள் ளன.

இந்த எந்திரங்களின் முதல் கட்ட சோதனை நிறைவடைந்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மற்றும் வாக்குப் பதிவு சரிபார்க்கும் எந்திரம் ஆகியவற்றின் முதல்கட்ட ஒதுக்கீடு குறித்த விரிவான வழிமுறைகள் குறித்து நடை முறை நூலில் குறிப்பிடப்பட் டுள்ளன. மேலும் இது, இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் (https:// www.eci.gov.in/evm-vvpat) இடம் பெற்றுள்ளது.

முதற்கட்ட ஒதுக்கீடு: அந்த வழிமுறைகளின் படி திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 தொகுதிகளில் பயன்படுத் தப்படவுள்ள மின்னணு வாக் குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வாக்காளர்கள், தாங்கள் செலுத்திய வாக்கினை சரி பார்க்கும் கருவிகள் தேர்தல் ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்னணு வாக் குப்பதிவு மேலாண்மை அமைப்பு மூலம் தொகுதி வாரியாக முதலாவது சம வாய்ப்புக்கு உட்படுத்தப் பட்டு ஒதுக்கீடு செய்யும் பணி நேற்று நடைபெற்றது.

திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன் தலை மையில் தேசிய மற்றும் மாநில அங்கீகாரம் பெற்ற கட்சியினர் முன்னிலை யில் இப்பணிகள் நடைபெற்றது. பின்னர் சட்டமன்ற தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவு சரிபார்க்கும் கருவிகள் ஆகியவற்றின் விவர பட்டியல்கள் தேசிய, மாநில அங்கீகாரம் பெற்ற கட்சியினருக்கு வழங்கப்பட்டது.

பிறகு மதியம் மாவட்ட காப்பு அறை அரசி யல் கட்சியினர் முன்னிலையில் திறக்கப்பட்டு, முதற் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியல்படி மின்னணு வாக் குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவை சரிபார்க்கும் கருவிகள் சம்பந்தப்பட்ட தேர் தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் வசம் ஒப்படைக் கப்பட்டது. பின்னர் அவை மாவட்ட காப்பறையில் இருந்து பாதுகாப்பாக வாகனங்களில் எடுத்துச்செல்லப் பட்டு, சம்பந்தப்பட்ட தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள காப்பு அறையில் அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சியி னர் முன்னிலையில் வைக்கப் பட்டு, 'சீல்' வைக்கப்படும்.


மேலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டவுடன் சட்டமன்ற தொகுதி வாரியாக பயன்படுத்தப் படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு எந் திரங்களின் பட்டியல் போட் டியிடும் வேட்பாளர்களுக்கு வழங்கப்படும். அதன்பின்னர், அவை மண்டல வாரியாகவும். வாக்குச்சாவடி வாரியாகவும் பிரித்து அனுப் பப்படும் என்று மாவட்ட தேர்தல் பிரிவினர் தெரிவித்தனர்.

# கிருஷ்ணகிரியில் உரிய ஆவணங்களின்றி கொண்டுசென்ற ரூ. 2.02 லட்சம் பறிமுதல்

கிருஷ்ணகிரி: மாரசை.24–

கிருஷ்ணகிரி அருகே உரிய ஆவணங்களின்றி இருவர்கொண்டுசென்ற ரூ. 2.02 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர்பறிமுதல் செய்தனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, பறக்கும் படையினர்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாகனத் தணிக்கை மேற்கொண்டு ஆவணமின்றி கொண்டுசெல்லப்படும் ரொக்கத்தை பறிமுதல் செய்து வருகின்றனர்.

அதன்படி, கிருஷ்ணகிரி சட்டப்பேரவைத் தொகுதி, நிலை கண்காணிப்புக் குழுவினர், ஆலப்பட்டி அருகே பாலகுறியில் வாகனத் தணிக்கை மேற்கொண்டனர். அப்போது, காரில் உரிய ஆவணங்களின்றி, சேலம் சாரதா கல்லூரி பகுதியைச் சேர்ந்த கர்ணன் எடுத்துச்சென்ற ரூ. 1.02 லட்சத்தை பறிமுதல் செய்தனர். இதேபோல, கிருஷ்ணகிரி குப்பம் சாலையில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி அருகே, ஆந்திர மாநிலம், அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிவாலட்சுமி நாராயணரெட்டி என்பவர்ஆவணங்களின்றி காரில் கொண்டுசென்ற ரூ. 1 லட்சத்தை அலுவலர்கள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யயப்பட்ட ரூ. 2.02 லட்சம் ரொக்கத்தை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்ஷாஜகான், வட்டாட்சியர்ரமேஷ் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.



லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின், காமராஜ் நகர் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிடும் நிலையில், நேற்று மதியம் 12 மணிக்கு தட்டாஞ்சாவடி ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார். இதனை முன்னிட்டு, மணக்குள விநாயகர் ஆலயத்தில் தனது வேட்பு மனுவை வைத்து சிறப்பு பூஜை செய்து சாமி தரிசனம் செய்தார்.

# ஆற்காடு அருகே வாக்காளர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்த ரூ.54ஆயிரம் மதிப்பிலான வேட்டி, சேலை, சட்டை பறிமுதல்

ஆற்காடு : மார்ச்.24–

தமிழக சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. அதனை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க தீவிர நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் பறக்கும் படை டீம் பி பார்த்திபன் தலைமையிலான குழுவினர் ஆற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாவரம் பகுதியில் நேற்று இரவு வாகனத்தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது அதே பகுதியில் வாக்காளர் களுக்கு வேட்டி, சட்டை மற்றும் சேலைகள் விநியோகம் செய்வதாக மாவட்ட தேர்தல் கட்டுப் பாட்டு அறைக்கு புகார் வந்துள்ளது. அதனை தொடர்ந்து அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பறக்கும் படையினர் அங்கு சென்று சோதனையிட்டபோது அங்கு விநியோகம் செய்து கொண்டிருந்த நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். அதனை தொடர்ந்து ரூ54,000 மதிப்பிலான தலா 45வேட்டிகள், சட்டைகள் மற்றும் சேலைகளை பறக்கும் படையினர் அதிரடியாக பறிமுதல் செய்தனர். அதனை ஆற்காடு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஏகாம்பரத்திடம் ஒப்படைத்தனர். அப்போது வருவாய் ஆய்வாளர்கள் விசாகரன், ராமு மற்றும் வருவாய்த்துறையினர் உறவினர் இருந்தனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# பெற்றோர் அறிய வேண்டிய பாடம் சேலம் எடப்பாடியில் 9 ஆம் வகுப்பு மாணவியும், தனியார் நிதி நிறுவன ஊழியரும்.

சேலம். மார்ச்.24–

சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 14 வயது மாணவி, அங்குள்ள அரசு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தாள்.

நேற்று இந்த மாணவியின் பெற்றோர் விவசாய வேலைக்கு சென்று விட்டனர். இந்நிலையில் மாணவி வீட்டில் தனியாக இருந்தபோது, அதே கிராமத்தை சேர்ந்த இளைஞர் வீட்டிற்குள் புகுந்தார். அப்போது இளைஞர் செய்த காரியம் அவரை சிறையில் தள்ளியிருக்கிறது. அதேநேரம் யாருமே எதிர்பார்க்காத ஒரு விஷயம் சிறுமிக்கு நடந்துள்ளது. சிறுமிகள் அறிய வேண்டிய அந்த செய்தியை பார்ப்போம்.

சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே உள்ளஒரு கிராமத்தை சேர்ந்த 14 வயது மாணவி, அங்குள்ள அரசு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தாள். நேற்று இந்த மாணவியின் பெற்றோர் விவசாய வேலைக்கு சென்று விட்டார்கள். இந்நிலையில் மாணவி வீட்டில் தனியாக இருந்தபோது, அதே கிராமத்தை சேர்ந்த வாலிபர் ஒருவர் வீட்டுக்குள் புகுந்து சிறுமியிடம் அத்துமீறலில் ஈடுபட்டதாக தெரிகிறது. இதனை கூச்சலிட்ட சிறுமியின் குரல் கேட்டு, அக்கம் பக்கத்தினர் வீட்டுக்குள் புகுந்து அந்த இளைஞரை பிடித்து சரமாரியாக தாக்கியுள்ளனர்.



தவறான முடிவு: இந்த சம்பவத்தால் ஊரே ஒன்று கூடியது. ஊரில் உள்ள அனைவருக்கும் நடந்த சம்பவம் தெரியவந்துள்ளது. இதனால் அவமானம் எனறு தவறாக நினைத்த அந்த மாணவி வீட்டில் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். இதனால் அந்த கிராமத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்த தேவூர் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினார்கள். அத்துடன் மாணவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பொதுமக்கள் தாக்கியதில் காயம் அடைந்த அந்த இளைஞரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.


பிரேத பரிசோதனை: இந்த சம்பவம் குறித்து மாணவியின் பெற்றோர் தரப்பில் தேவூர் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பிறகே மாணவியிடம் வாலிபர் சில்மிஷத்தில் ஈடுபட்டாரா? அல்லது அத்துமீறலில் ஈடுபட்டாரா? என்பது தெரிய வரும் என்று போலீசார் கூறினர்.

இளைஞர் சதீஷ் கைது: பொதுமக்கள் தாக்கியதில் காயம் அடைந்த வாலிபரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர் அதே கிராமத்தை சேர்ந்த சதீஷ் (வயது 32) என்பதும், இவருக்கு மனைவியும், 2 மகன்களும் உள்ளதும் தெரியவந்தது. மேலும் சதீஷ் தனியார் நிதி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரிடம் சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். இதில் மாணவி அவமானம் என தவறுலாக நினைத்து வாழ்க்கையை முடித்துக் கொண்டது பெரிய தவறு ஆகும். இப்படியான சூழலை யாரேனும் எதிர்கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பைத பார்ப்போம்.

சட்டம் உங்கள் பக்கம்: இது போன்றசூழலில்பாதிக்கப்பட்ட குழந்தைகள் பயப்படத் தேவையில்லை என்பதற்கு இந்தியச் சட்டம் போக்சோ என்ற மிக வலிமையான ஆயுதம் இருக்கிறது. பாதிக்கப்பட்ட குழந்தையின் பெயர், புகைப்படம் அல்லது அடையாளம் எக்காரணம் கொண்டும் ஊடகங்களிலோ அல்லது பொது வெளியிலோ கசியக் கூடாது என்பது சட்ட விதி. மீறினால் கடும் தண்டனை உண்டு. அதனால் வெளியிட வாய்ப்பே இல்லை.. வாக்குமூலம் வாங்கும்போது போலீசார் சீருடையில் வரமாட்டார்கள். குழந்தைக்குப் பயமில்லாத சூழலில்தான் விசாரணை நடக்கும். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு பிணை கிடைப்பது மிகக் கடினம். ஆயுள் தண்டனை கிடைக்க அதிக வாய்ப்புள்ளது.

பெற்றோருக்கான விழிப்புணர்வு: குழந்தைகள் இதுபோன்ற இக்கட்டான சூழலில் தற்கொலை முடிவை எடுப்பதற்குக் காரணம் "சமூகம் என்ன சொல்லுமோ?" அல்லது "பெற்றோர் நம்மைக் கண்டிப்பார்களோ?" என்ற பயம்தான். அப்போது "என்ன நடந்தாலும் நாங்கள் உன்னோடு இருக்கிறோம்" என்ற ஒற்றை வார்த்தை ஒரு உயிரைக் காப்பாற்றும். தவறு செய்தது அந்த நபர் தான், குழந்தை அல்ல. அந்தத் தவறுக்காகக் குழந்தை தண்டனை (தற்கொலை) அனுபவிக்கத் தேவையில்லை என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

# கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே ஆகாயத்தாமரை ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ள ஏரி துரித நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை



கிருஷ்ணகிரி: மார்ச்.24–

கிருஷ்ணகிரி நகரின் மையப்பகுதியில், புதிய பேருந்து நிலையம் மற்றும் தேசிய நெடுஞ் சாலைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள பெரிய ஏரி தற்போது ஆகாயத் தாமரை செடிகள் அடர்ந்து வளர்ந்து ஒரு புல்வெளி போல காட்சிய ளிக்கிறது. இதனால் ஏரி நீர் வெளியே தெரியாத அளவிற்கு முழுமையாக மூடப்பட்டுள்ளது.

பாதிப்புகள்:

* நீர் மாசுபாடு: ஆகாயத்தாமரைகள் வேகமாக பரவுவதால் ஏரியின் ஆக்சிஜன் அளவு குறைந்து, நீர் நிலையின் தரம் மோசமடைந்து வருகிறது.

* கொசுத் தொல்லை: தேங்கி நிற்கும் நீரில் இந்த செடிகள் வளர்வதால் கொசுக்கள் உற்பத்தியாகி, அருகில் உள்ள குடியிருப்பு வாசிகளுக்கும், பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கும் டெங்கு, மலேரியா போன்ற நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

* துர்நாற்றம்: கழிவுகள் கலப்பதாலும், செடிகள் அழுகுவதாலும் அப் பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுகிறது.

பொதுமக்களின் கோரிக்கை:

ஏரியைச் சுற்றியுள்ள நடைபயிற்சி மேற்கொள் பவர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் கூறுகையில், "பல ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி தற்போது குப்பை மேடாகவும், ஆகாயத்தாமரைகளின் கூடாரமாகவும் மாறிவிட்டது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படுவதோடு, சுகாதார சீர்கேடும் ஏற்படுகிறது" என கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, நவீன இயந்திரங்கள் மூலம் ஆகாயத் தாமரைகளை அகற்றி, ஏரியைத் தூர்வார வேண்டும் என்றும், கழிவுநீர் ஏரியில் கலப்பதைத் தடுக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் கிருஷ்ணகிரி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது அணியை மேலும் வலுசேர்க்கும் மனோகர் தலைமையிலான அகில இந்திய நெட்வொர்க் நலச்சங்கம்

## இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்து அறிவித்தார் கூட்டணி தலைவர் ஆர்.எல் வெங்கட்ராமன்.!!!.






புதுச்சேரி, மார்ச்.24–

புதுச்சேரியில் நடைபெற்ற மக்கள் விரோத ஆட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை அகற்றி ஜனநாயக ரீதியான நேர்மையான மக்களுக்கான ஒரு ஆட்சியை உருவாக்க ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் மக்களுக்கான ஆட்சியை உருவாக்க விரும்பும் கட்சிகளுடன் இணைந்து செயல்பட எண்ணி புதுவையில் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மூன்றாவது அணி உருவாக்கப்பட்டு அதில் அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி, அகில இந்திய மஜ்லிஸ் முஸ்லீம் கட்சி மற்றும் சமூக இயக்கங்களுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து உள்ளது .

இந்த அணியை மேலும் வலுசேர்க்கும் வகையில் அகில இந்திய நெட்வொர்க் நலச்சங்க தலைவர் திரு.மனோகர் அவர்கள் தனது நிர்வாகிகள் 25 பேருடன் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் ஆர் எல் வி அவர்களை நேரில் சந்தித்து மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தார். மேலும் புதுச்சேரியில் நடைபெற்று வரும் மக்கள் விரோத மோசடிகளை தடுத்து, மக்கள் நலன் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த தேர்தலில் கூட்டணியில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்து , ஆதரவு கடிதம் கொடுத்து உறுதியளித்தனர் .

மேற்கண்ட ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது அணியின் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்ய ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணி கட்சியினர் முழு ஒத்துழைப் கொடுத்து உதவும்படி அனைவரையும் அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

# பாஜக மாநில தலைவர் வேட்பு மனு தாக்கல்



பாரதிய ஜனதா கட்சியின் ராஜ் பவன் தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணியை வேட்பாளரும் புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் ஷூ.றி.ராமலிங்கம்.ணிஜ்.விலிகி அவர்கள் தனது வேட்பு மனுவை தொண்டர்கள், ஆதரவாளர்கள், கூட்டணி கட்சித் தலைவர்களுடன் தாக்கல் செய்தார்.

# மேட்டுப்பாளையத்தில் ரூ.8,98,200 பணம் பறிமுதல் பறக்கும் படை அதிரடி

மேட்டுப்பாளையம் : தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்.23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன.மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று ஒரே நாளில் 8 பேரிடமிருந்து உரிய ஆவணங்கள் இன்றி எடுத்து வரப்பட்ட ரூ.8,98,200 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி நேற்று நிலை கண்காணிப்பு குழு2 சிறுமுகையை அடுத்த சின்னக் கள்ளிப்பட்டி சோதனைச்சாவடியில் வாகன சோதனை மேற்கொண்ட போது கர்நாடக மாநிலம் மாண்டியா ஸ்ரீரங்கப்பட்டினம் பகுதியை சேர்ந்த கோவிந்த கவுடா(67) என்பவரின் காரில் இருந்து ரூ.2.50 லட்சம், அதே மாநிலத்தை சேர்ந்த குண்டல்பேட் பகுதியை சேர்ந்த மாதப்பா(26) என்பவரின் லோடு வாகனத்தில் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்து வரப்பட்ட ரூ.76,200, கர்நாடக மாநிலம் குண்டல்பேட் ஹங்கல்லி பகுதியை சேர்ந்த ராமே கவுடா(38) என்பவரின் காரில் இருந்து ரூ.1.05 லட்சம் ரொக்கம்,

அதே மாநிலம் குண்டல்பேட் பேரம்பாடி பகுதியை சேர்ந்த மணிகண்டா(30) என்பவரின் காரில் இருந்து ரூ.80 ஆயிரம், பறக்கும் படையினரின் வாகன சோதனையில் சின்னக்கள்ளிப்பட்டி சோதனை சாவடி அருகில் கர்நாடகா மாநிலம் அரபிகேரா தொட்டடே மேனே பகுதியை சேர்ந்த பழனிச்சாமி(50) என்பவரின் காரில் இருந்து ரூ.1,73,500, கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் கொள்ளேகால் பகுதியை சேர்ந்த ஹிருதயராஜ்(45) என்பவரின் காரில் இருந்து ரூ.86,000, கர்நாடகா மாநிலம் சாம்ராஜ் நகர் கொள்ளேகால் பகுதியை சேர்ந்த நாகராஜு(40) என்பவரின் காரில் இருந்து ரூ.60 ஆயிரம், நிலை கண்காணிப்பு குழு 4 மேட்டுப்பாளையத்தில் இருந்து கோவை செல்லும் வழியில் பெரியமத்தம் பாளையம் அருகே வாகன சோதனையில் ஈடுபட்ட போது கேரள மாநிலம் பாலக்காடு கூடலூர் பகுதியை சேர்ந்த கிருஷ்ணாத்மஜன்(52) என்பவரின் காரிலிருந்து ரூ.67,500 என மொத்தமாக 8 பேரிடமிருந்து ஒரே நாளில் ரூ.8,98,200 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

பறிமுதல் செய்த பணத்தை பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியர் பாலமுருகன் ,தலைமையிடத்து துணை வட்டாட்சியர் சங்கர்லால் ஆகியோரிடம் ஒப்படைத்தனர்.

# மக்களவையில் எம்.பி., சி.என். அண்ணாதுரை வலியுறுத்தல்



காட்பாடி திருவண்ணாமலை விழுப்புரம் இடையே இரட்டை இரயில் பாதை திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என மக்களவையில் எம்.பி. சி. ன். அண்ணாதுரை, வலியுறுத்தல்

18 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள சென்னை திருவண்ணாமலை விரைவு ரயிலை தாம்பரம் விழுப்புரம் வழியாக அறிமுகப்படுத்த வேண்டும்

புதுச்சேரி விழுப்புரம் ரயிலை திருவண்ணாமலை வரை நீட்டிக்க வேண்டும் குண்டுர் திருப்பதி விரைவு ரயிலை திருவண்ணாமலை வழியாக திருச்சி வரை நீட்டிக்க வேண்டும்

அத்தியாவசியமான ரயில்களை திருவண்ணாமலை வழியாக இயக்க வேண்டும்என எம்.பி. சி. என்.அண்ணாதுரை, வலியுறுத்தி உள்ளார்

# ஏ.டி.எம். சேவையை 5 முறைக்கு மேல் பயன்படுத்தினால் ரூ.17 கட்டணம்: இந்தியன் வங்கி அறிவிப்பு

சென்னை: ஏ.டி.எம். சேவையை 5 முறைக்கு மேல் பயன்படுத்தினால் ரூ.17 கட்டணம் வசூலிக்கப்படும் என இந்தியன் வங்கி அறிவித்துள்ளது. கட்டணம் வசூலிப்பு தொடர்பாக வாடிக்கையாளர்களின் செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும் என இந்தியன் வங்கி தெரிவித்துள்ளது

# தேமுதிக மாவட்ட செயலாளர்களுடன் பிரேமலதா முக்கிய ஆலோசனை: எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து கருத்து கேட்பு

சென்னை: மார்ச்.24–

தேமுதிக மாவட்ட செயலாளர்களுடன் பிரேமலதா விஜயகாந்த் இன்று முக்கிய ஆலோசனை நடத்தினார். அப்போது எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது.தமிழக சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் தேமுதிக இடம் பெற்றுள்ளது. கூட்டணியில் இணைந்துள்ள அந்த கட்சியில் எல்.கே.சுதீஷ்க்கு மாநிலங்களவை பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேமுதிகவுக்கு வர உள்ள சட்டப்பேரவை தேர்தலில் எவ்வளவு தொகுதிகளை திமுக ஒதுக்க போகிறது என்ற எதிர்ப்பார்ப்பு நிலவியுள்ளளது. அதே நேரத்தில் தேமுதிக தரப்பில் இரட்டை இலக்கத்தில், அதாவது 10 தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணியில் உள்ள எல்லா கட்சிகளுக்கும் இடங்களை பகிர்ந்து கொடுக்க வேண்டியிருப்பதால் தொகுதிகளை குறைத்துக் கொள்ளச் சொல்லி கூட்டணிக் கட்சிகளை திமுக கோரி வருகிறது. தேமுதிகவிடமும் ஒரு தொகுதியை குறைத்து கொண்டு 9 தொகுதிகளை பெற்றுக் கொள்ளுமாறு திமுக கோரியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் அவைத்தலைவர் இளங்கோவன், பொருளாளர் எல்.கே.சுதீஷ் எம்பி, தலைமை நிலைய செயலாளர் பார்த்தசாரதி உள்ளிட்ட மாநில நிர்வரிகள், மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர். இதில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும் எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடலாம் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் வர உள்ள சட்டப்பேரவை தேர்தல் பிரசார உத்திகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# கூடலூர் அருகே 500 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல்!!

நீலகிரி: மார்ச்.24–

கூடலூர் நாடுகானி சோதனைச்சாவடியில் வாகன தணிக்கையின் போது 500 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டது. மராட்டியத்தைச் சேர்ந்த அஜய் கிசான் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வந்த தங்கத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

# திருச்சியில் 2 இடங்களில் பறக்கும் படை சோதனையில் ரூ.6 லட்சம் சிக்கியது கருவூலத்தில் ஒப்படைப்பு

திருச்சி மார்ச் 24

வருகிற ஏப்ரல் 23 ந்தேதி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் விநியோகம் செய்வதை தடுக்க ஆங்காங்கே தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனை நடத்தி வருகின்றனர் அந்த வகையில் திருச்சி ஓலையூர் சுற்று ரோடு பகுதியில் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் காரில் வந்த ஒருவரிடம் ரூ.1 லட்சம் ரொக்க பணம் கைப்பற்றப்பட்டது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அதிகாரிகள் அந்த பணத்தை கைப்பற்றி கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

முன்னதாக நேற்று இரவு உடையான்பட்டி ஆற்றுப்பாலம் அருகே மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரிடம் இருந்து ரூபாய் 4 லட்சத்து 78 ஆயிரம் கைப்பற்றப்பட்டது.

இதனை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் கைப்பற்றி திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.




2026 தமிழ்நாடு சடடமன்ற பொதுதேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருவதன் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் வாக்காளிப்பது அனைவரின் ஜனநாயக கடமை வாருங்கள் 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு ராட்சத பலூனை தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் ஜெகதீஷ் பிரசாத் மீனா, ஜெரம் பேடா, சக்ரதார்பாபு, பிஜய்குமார் தாஸ், பிரவீன்குமார் லஷ்கர், மதுஸ்மிதா சாஹூ ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் பறக்க விட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# திருவள்ளூர் அருகே மது அருந்துவதற்கு ஓசியில் கிளாஸ் தர மறுத்த மளிகைக் கடை உரிமையாளரை அரிவாளால் கையில் வெட்டிய நபர் கைது : போலீஸ் விசாரணை



திருவள்ளூர் மார்ச் 24 :

திருவள்ளூர் அடுத்த தாமரைப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் ரவி இவர் 30 ஆண்டுகள் மேலாக அப்பகுதியில் மளிகைக் கடை வைத்து நடத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று மாலை அதே பகுதியைச் சேர்ந்த பல்வேறு வழக்கில் தொடர்புடைய ராசா என்பவர் கஞ்சா போதையில் கடைக்கு வந்துள்ளார், அப்போது கடை உரிமையாளர் ரவியிடம் மது அருந்துவதற்கு ஓசியில் கிளாஸ் கேட்டுள்ளார்,

அப்போது கடை உரிமையாளர் விளக்கு ஏற்றிவிட்டு தருவதாக கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ராசா கடை உரிமையாளரை தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் தாக்கியுள்ளார், தாக்குதலில் இருந்த தப்பிக்க ரவி தனது இடது கையால் தடுத்துள்ளார், அப்போது அவரது கை விரல் பலமாக வெட்டு காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் கடை உரிமையாளரை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்தனர் இச்சம்பவம் தொடர்பாக வெங்கல் போலீசில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து ராசாவை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## முறையற்ற தொடர்பால் விபரீதம்.

# சேலத்தில் கொலை வழக்கில் கணவன் - மனைவி கைது



சேலம். மார்ச்.24–

சேலத்தில் முறையற்ற தொடர்பால் ஏற்பட்ட தகராறில் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். தொழிலாளியை கொலை செய்த வழக்கில் கணவன் மனைவி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையின் பின்னணி என்ன?

சேலம் மாநகரம் பொன்னம்மாபேட்டை சுண்ணாம்புக்காரத் தெருவில் கோபால் வனிதா தம்பதி குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். இந்த தம்பதிக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் என நான்கு பிள்ளைகள் உள்ளனர். இந்த நிலையில் கோபாலின் மனைவி வனிதாவுக்கும், அதே பகுதியில் குடியிருக்கும் அசோக் என்கிற குப்பன் என்பவருக்கும் முறையற்ற தொடர்பு இருந்துவந்ததாக கூறப்படுகிறது. இதனால் சந்தேகம் அடைந்த கணவன் கோபால் கடந்த மூன்று வருடங்களாக அசோக் உடன் அடிக்கடி தகராறு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் சனி அன்று இரவு கோபால் மற்றும் அசோக் ஆகியோருக்கு இடையே சின்ன மாரியம்மன் கோயில் அருகே வைத்து, வாய் தகராறு ஏற்பட்டு, கைகலப்பாக மாறியுள்ளது. அருகே இருந்தவர்கள் அவர்களை விலக்கி விட்ட நிலையில், இருவரும் அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டனர். சிறிது நேரத்தில் அசோக் மற்றும் அவரது மனைவி மயிலு, மைத்துனர் முனியப்பன் ஆகியோர் கோபால் வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது இரு தரப்பினரும் அடித்துக் கொண்டிருக்கும்போது, அசோக் யாரும் எதிர்பார்க்காத நிலையில் கத்தியால் கோபாலின் மார்பில் பலமாக குத்தியுள்ளார். இதில் நிலைகுலைந்த கோபாலை மீட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் வரும் வழியிலேயே அவர் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில், வழக்குப்பதிவு செய்த போலீசார் அசோக் என்கிற குப்பன் மற்றும் அவரது மனைவி மயிலு ஆகியோரை கைது செய்தனர். மேலும், தலைமறைவாக உள்ள அசோக்கின் மைத்துனர் முனியப்பன் என்பவரை தேடி வருகின்றனர். முறையற்ற தொடர்பால் கூலித் தொழிலாளி கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் 28ம் தேதி 12,076 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி

திருவண்ணாமலை : மார்ச்.24–

திருவண்ணாமலை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் 12,076 வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு முதற்கட்ட தேர்தல் பயிற்சி வகுப்பு வரும் 28ம் தேதி நடக்கிறது.தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி ஒரே கட்டமாக மாநிலம் முழுவதும் நடைபெற உள்ளது.

அதையொட்டி, வரும் 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது. அடுத்த மாதம் 6ம் தேதி வரை மனுக்கள் பெறப்படும். அதைத்தொடர்ந்து, 7ம் தேதி வேட்புமனுக்கள் பரீசீலனை நடைபெறும். வரும் 9ம் தேதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

அதையொட்டி,திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை, செங்கம், கலசபாக்கம், கீழ்பென்னாத்தூர், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளில், 2516 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதோடு, 8 சட்டமன்ற தொகுதிகளில் பணிபுரிய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் 12,076 பேர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தலா 4 பேர் பணியில் ஈடுபடுவார்கள். மேலும், 20 சதவீதம் பேர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்படுவார்கள்.




இந்நிலையில் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்படி,வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பணி ஒதுக்கீடு கணினி குலுக்கல் முறையில் நேற்று நடந்தது. கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தர்ப்பகராஜ் மற்றும் தேர்தல் பொது பார்வையாளர் சஜேந்திரசிங் ஆகியோர் முன்னிலையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணி நியமன ஆணை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் இன்று முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மூன்று கட்டங்களாக பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்ட பயிற்சி வகுப்பு வரும் 28ம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு, கீழ்பென்னாத்தூர், கலசபாக்கம், போளூர், செய்யாறு, ஆரணி, வந்தவாசி, சேத்துப்பட்டு, வெம்பாக்கம், ஜவ்வாதுமலை ஆகிய 12 தாலுகாக்களில் இப்பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

இந்நிலையில், திருவண்ணாமலை நாச்சிப்பட்டு பகுதியில் உள்ள தனியார் பள்ளியில், திருவண்ணாமலை தாலுகா அளவில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்கான மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை கலெக்டர் தர்ப்பகராஜ், தேர்தல் பொது பார்வையாளர் சஜேந்திரசிங் ஆகியோர் நேற்று நேரில் ஆய்வு செய்தனர்.

இப்பயிற்சி வகுப்பில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளும் முறை, இரண்டு பேலட் யூனிட்களை, கட்டுப்பாட்டு இயந்திரத்துடன் இணைப்பது எப்படி, படிவங்களை முறையாக பூர்த்தி செய்தல், மாதிரி வாக்குப்பதிவு நடத்துதல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு சீல் வைத்தல் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அப்போது, டிஆர்ஓ ராம்பிரதீபன், ஆர்டிஓ செல்வம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) அன்பழகன், தேர்தல் பிரிவு தாசில்தார் தியாகராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# திருவள்ளூர் மாவட்ட தலைவர் சசிகுமார் தலைமையில் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



திருவள்ளூர் மார்ச் 24

திருவள்ளூரில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஆர். சசிகுமார் பேசினார்.

இதில், நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் பணியாற்றுவது, கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய எவ்வாறு பணிகளை மேற்கொள்வது என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் மாநில துணை தலைவர் ஏகாட்டூர் ஆனந்தன், மாநில செயலாளர்கள் சம்பத். கோவிந்தராஜ், வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகள் இமாலய அருண் பிரசாத், முருகன், மாநில நெசவாளர் அணி தலைவர் சுந்தரவேல், ஓபிசி பிரிவு மாநில செயல் தலைவர் வெங்கடேஷ்,மாநில இளைஞர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திவாகர்,மாநில மீனவரணி செயலாளர் செந்தில்குமார்,மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் வெங்கட்ராஜ், அருள்மொழி.ரமேஷ், ஜோதி சுதாகர், ராஜலட்சுமி,சித்ரா,

டில்லி பாபு,ஞானம், எஸ்.சி துறையின் பொறுப்பாளர்கள் அன்பு,பிரபு,ஊடக பிரிவு பொறுப்பாளர் முகமது தாரிக், சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் கலீல் ரகுமான், மாவட்ட துணை தலைவர் மணவாளன் ,சத்யா, செல்வகுமார்,நகர தலைவர்கள் ஸ்டாலின் ,ராமகிருஷ்ணன், வட்டார தலைவர்கள் முகுந்தன் ,சதீஷ், சிவாச்சாரி மற்றும் பாரதி ,ஹரிதாஸ் ,ராஜ்குமார்,பார்த்திபன் ,கோஹ்லி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோரிக்கைகளை ஏற்காவிட்டால் தேர்தல் ஆணையம், அதிகாரிகளை கண்டித்து 27ம் தேதி ஆர்ப்பாட்டம்:

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு அறிவிப்பு

சென்னை: மார்ச்.24–

சென்னை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைப்புக் குழு சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கத்தின் மாநிலத் தலைவர் விக்கிரமராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில், தமிழக தேர்தல் விதி நடைமுறைகள் அமலாக்கத்தினால், சிறு, குறு வணிகர்கள் முதல் பெருநிறுவனங்கள் வரை ரொக்கபணம் பறிமுதல், பொருட்கள் பறிமுதல் உள்ளிட்டவை நடக்கின்றன.



இதுகுறித்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு பேரமைப்பு கோரிக்கை மனு அளித்து, தளர்வுகள் அளித்திட கோரிக்கை அளித்திருந்தது. ஆனாலும் தணிக்கையில் ஈடுபடும் அதிகாரிகள், தவறான உள்நோக்கத்துடன் பறிமுதல் செய்கின்றனர். இந்நடவடிக்கைகளை எதிர்த்தும், கைப்பற்றப்பட்ட ரொக்கம் மற்றும் பொருட்களை உடனடியாக திருப்பித் தருவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளாததை சுட்டிக்காட்டியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதுதொடர்பாக மீண்டும் தலைமை தேர்தல் அதிகாரிக்கு மனு அளிப்பதென்றும், 27ம் தேதி தேர்தல் ஆணையமும், அதிகாரிகளும் கோரிக்கைகளை ஏற்காவிடில் மாவட்டங்கள் தோறும், தேர்தல் நடைமுறை விதிகளை எதிர்த்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கண்டன ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் வணிகர்களும், வணிகக் குடும்பங்களும் வாக்களிப்பை புறக்கணிப்பது சம்பந்தமான முடிவுகளை நிர்ப்பந்தம் காரணமாக எடுக்கும் சூழ்நிலை உருவாகும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# 'எங்கள் வாக்கு விற்பனைக்கு அல்ல' பேனர் வைத்த காரைக்குடி கிராம இளைஞர்கள்

காரைக்குடி: காரைக்குடி அருகே 'மக்கள் வாக்குகள் விற்கப்பட மாட்டாது, 100 சதவீத வாக்குப் பதிவை உறுதி செய்வோம்' என தங்கள் ஊரில் கிராம இளைஞர்கள் அறிவிப்பு பேனர் வைத்துள்ளனர்.

வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணம் தருவதைத் தடுக்க தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே ஆலம்பட்டு பெரியார் நகரில், 'மக்கள் வாக்குகள் விற்கப்பட மாட்டாது. 100 சதவீத வாக்குப் பதிவை உறுதி செய்வோம்' என ஊர் எல்லையில் ஆலம்பட்டு நற்பணி குழுவினர், தந்தை பெரியார் மறுமலர்ச்சி டாக்டர் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத்தினர் பேனர் வைத்துள்ளனர். மேலும்,இதுதொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகளையும் பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்கூரை உள்ளிட்ட பொது இடங்களிலும் ஒட்டியுள்ளனர். இதுகுறித்து ஆலம்பட்டு பெரியார் நகர் இளைஞர்கள் கூறுகையில், 'எங்கள் கிராமத்தில் அனைவரும் வாக்குக்கு பணம் வாங்க மாட்டோம் என முடிவு செய்துள்ளோம். அரசியல் கட்சியினர் பணத்தோடு வந்துவிடக் கூடாது என்பதற்காக, ஊர் எல்லையிலேயே அறிவிப்புப் பேனர் வைத்துள்ளோம்' என்றனர்.



புதுச்சேரி மங்கலம் தொகுதியில் போட்டியிடுவதற்கு கண்ணபிரான் சுயேட்சை வேட்பாளராக தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

# பனிக்காலம் முடிந்தும் தாவரவியல் பூங்காவில் பூத்திருக்கும் அஜிலியா மலர்கள் சுற்றுலா பயணிகள் கண்களுக்கு விருந்து

ஊட்டி : மார்ச்.24–

பனிக்காலம் நிறைவடைந்த போதிலும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் காணப்படும் அஜிலியா மலர்கள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவில் வண்ண வண்ண மலர்கள், வானுயர்ந்த மரங்கள், ஆசியாவிலேயே பெரிய புல்வெளி மைதானம், வானுயர்ந்த மரங்கள் உள்ளிட்ட இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்க நாள்தோறும் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருன்றனர்.

இந்த நிலையில் பூங்காவில் உள்ள பல வெளி



நாடுகளில் காணப்படும் மரங்கள், மலர் செடிகள் இங்கு வளர்க்கப்படுகிறது. இவைகள் அந்தந்த பருவங்களில் மட்டும் பூக்கும் தன்மை கொண்டதாக உள்ளது. இத்தாலியன் பூங்கா மற்றும் கண்ணாடி மாளிகை அருகில் பனிக்காலத்தில் பூக்கும் அஜிலியா மலர் செடிகள் உள்ளன.

இந்த செடிகளில், பனிக்காலத்தில் மட்டுமே மலர்கள் பூத்து காணப்படும். வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு இரு வண்ணத்திலும், வெள்ளை, இளஞ்சிவப்பு நிறத்தில் அஜிலியா மலர்கள் பூக்கும். இவைகள் டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை பனி பெய்யும் சமயங்களில் அதிகமாக காணப்படும். அதன்பின், இந்த செடிகளில் மலர்கள் அதிகமாக இருக்காது.

ஆனால் இம்முறை தற்போது வரை இந்த செடிகளை மலர்கள் பூத்து காணப்படுகிறது. முதல் சீசனுக்காக பூங்காவை தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில், பூங்காவில் மலர்கள் இன்றி காட்சியளிக்கிறது. அதே சமயம் இத்தாலியன் பூங்கா அருகே பூத்துக் குலுங்கும் அஜிலியா மலர்களை சுற்றுலா பயணிகள் வெகுவாக கவர்ந்து வருகிறது. இதன் அருகே நின்று சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர்.

# எங்க கட்சிக்கு எத்தனை சீட்? டிடிவி.தினகரன் பேட்டி

சென்னை: மார்ச்.24–

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் டெல்லியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசிவிட்டு நேற்று முன்தினம் இரவு ஏர் இந்தியா பயணிகள் விமானத்தில் சென்னை திரும்பினார். அப்போது, விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவையும், தமிழ்நாடு பாஜ மேலிட பொறுப்பாளர் பியூஸ் கோயலையும் சந்தித்து பேசி, கலந்துரையாடல் நடத்திவிட்டு சென்னைக்கு திரும்பியுள்ளேன். ஆன்லைன் விளம்பரம்



ஏப்ரல் 23ம் தேதி நடக்க இருக்கும் தேர்தலில், தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும், எங்களுடைய தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறுவது குறித்து ஆலோசனை நடத்தினோம். மகாராஷ்டிரா, டெல்லி, அரியானா, பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி எப்படி ஒற்றுமையாக தேர்தல் பணியாற்றி, வெற்றி பெற்றார்களோ அதே போல் தமிழ்நாட்டிலும் வெற்றி பெறுவதற்கான கலந்துரையாடலை உள்துறை அமைச்சரும், பியூஸ் கோயலும் நடத்தினர்.

நான் கடந்த வாரமே அவர்களை சந்தித்து பேச இருந்தேன். ஆனால் வேலைப்பளு காரண மாக சந்திப்பு தள்ளிப் போனது. எங்கள் கூட்டணி தொகுதி பங்கீடுகள் பேச்சு வார்த்தைகள் அனைத்தும் சென்னையில் தான் அடுத்த இரண்டு மூன்று தினங்களில் நடந்து, சுமுகமாக அறிவிப்பு வெளியிடப்படும். அதை தொடர்ந்து வேட்பாளர்கள் அறிவிப்பு, வேட்பு மனுக்கள் தாக்கல், பிரசாரம் போன்ற தேர்தல் பணிகள் தொடங்கும்.

கூட்டணியில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்திற்கு எத்தனை இடங்கள் என்று ஊடகங்கள் இஷ்டம் போல் 6, 7, 8 என்று குறைவாக போட்டுக்கொண்டு இருந்தீர்கள். இன்று எண்ணிக்கையை சற்று உயர்த்தி இருக்கிறீர்கள். அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு சீட் கொடுப்பதில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு குழப்பம் எதுவும் இல்லை. ஆனால் ஊடகங்கள் தான், மிகவும் கருமித்தனமாக நடந்து கொள்கின்றன. இவ்வாறு டிடிவி. தினகரன் கூறினார்

# பறவைக் காய்ச்சல் பரவலால் மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்: சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சென்னை: பறவைக் காய்ச்சல் பரவலால் பொது மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என தமிழக சுகாதாரத் துறை அறிவுறுத்தி உள்ளது. சென்னை, கிண்டி சிறுவர் பூங்காவில் கடந்த சில நாட்களாக பறவைகள் மர்மமான முறையில் உயிரிழந்து வந்தன. இதுகுறித்து நடத்தப்பட்ட ஆய்வில், பூங்காவில் உள்ள பறவைகளுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சிறுவர் பூங்கா மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது. இது தொடர்பாக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்கள் தகுந்த முன்னெச்சரிக்கையோடு விலங்குகள் மற்றும் பறவைகளை கையாள வேண்டும். பறவை காய்ச்சல் பாதிப்பு 99.9 சதவீதம் மனிதர்களுக்கு பரவ வாய்ப்பு இல்லை. எனவே, பொதுமக்கள் இதுகுறித்து அச்சப்பட தேவையில்லை. இறந்த அல்லது நோய்வாய்ப்பட்ட பறவைகளை வெறும் கையால் தொடக்கூடாது. இருமல், சளி, காய்ச்சல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் உள்ளிட்ட பொதுவான அறிகுறிகளே எச்3என்1 பறவைக்காய்ச்சல் அறிகுறிகளாக உள்ளது.

இந்த வகை பாதிப்பு கொண்டவர்கள் மருத்துவரை அணுக வேண்டும். பறவைகளை கையாள்பவர்கள் குறிப்பாக உடல்நலம் குன்றிய பறவைகளை கையாள்பவர்கள், இறந்த பறவைகளை கையாள்பவர்கள் மற்றும் இறைச்சி கூடத்தில் பணிபுரிப வர்கள் கவனத்துடன் பணிபுரிய வேண்டும். ஏதேனும் ஃப்ளூ காய்ச்சல் அறிகுறிகள் இருப்பின் அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம்/ அரசு மருத்துவமனை/மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

அசாதாரண பறவை இறப்புகள் இருப்பின் உடனே கால்நடை மருத்துவ துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். கைகளை கழுவுதல் உட்பட தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புறத்தினை சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும். முழுமையாக சமைக்கப்படாத மற்றும் சரிவர சமைக்கப்படாத முட்டை மற்றும் இறைச்சி வகைகளை உண்பதை தவிர்க்க வேண்டும்.

இறைச்சி கூடங்களில் பணிபுரிபவர்கள் இறைச்சி கழிவுகளை பொதுவெளியில் கொட்ட கூடாது. பண்ணை தொழிலாளர் கள் கையுறைகள், முகக்கவசம் (Mask) மற்றும் பூட்ஸ் காலணி களை அணிய வேண்டும்.பண்ணைகளில் கிருமிநாசினி (Disi nfectant) தெளித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இந்நோய் சம்பந்தமான வதந்திகளை நம்ப வேண்டாம் , கூடுதல் தகவல்களுக்கு தொலைபேசி எண். 104ஐ தொடர்புகொள்ள வேண்டும்.

# தேர்தல் விதிகளை மீறி பரிசுப்பொருள் விநியோகம் : தவெக மாவட்டச் செயலாளர் மீது வழக்குப்பதிவு

சேலம் : மார்ச்.24–

தேர்தல் விதிகளை மீறி பரிசுப்பொருள் விநியோகம் செய்தது தொடர்பாக தவெக சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் பார்த்திபன் மீது காவல் துறை வழக்குப்பதிவு செய்துள்ளது. இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியின்போது பொதுமக்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கியதாக புகார் கூறப்படுகிறது. ரம்ஜான் பண்டிகை நாளில் தவெக சின்னம். கொடிகளுடன் தண்ணீர் பாட்டில் விநியோகித்ததாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421